# The Doctrine of the Soul of Ascetics in Agananooru

**Dr. K. Antonyraja**
*Assistant Professor, Department of Tamil Studies*
*Thiagarajar College (Autonomous), Tiruchirappalli*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: அக்டோபர்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255859

**Abstract**
*The soul refers to a part of a person that is connected to the divine and survives after the death of the body. Based on religion and philosophy, the soul is the immaterial aspect of a human being. The soul is considered the inherent part of living beings. Similarly, ancient Tamil people also held various doctrines about the soul of the deceased in their funeral rites and rituals. In Tamil classical literature, the funeral customs of ancient Tamils and the doctrines concerning the soul of the deceased have been recorded by ancient Tamil poets and scholars. This study aims to examine and bring forth the ancient Tamil doctrines about the soul of the deceased through Agananooru, one of the Eight Anthologies (Ettuthokai).*

***Keywords:*** *Funeral Symbol, Thaazhi, Stone Platform, Stone Heap, Grave, Stone Circle, Sarcophagus, Soul, Doctrine*

**References**

1. Subramaniam, S. Ve., Sangam Literature - Ettuthokai, Text and Commentary, Manivasagar Publications, Chennai, First Edition - 2006.
2. Rasamanikkanar, Ma., Tamil Civilization and Culture, Pari Nilayam, Chennai, First Edition - 1975.
3. Rasavelu, Su., Archaeological Illuminations, Sekar Publications, Chennai, Edition - 1998.
4. Rasan, K., Sangam Period in Archaeological Perspective, International Institute of Tamil Studies, Chennai, Edition - 2004.
5. Sellam, V. Thi., History and Culture of Tamil Nadu, Manivasagar Publications, Chennai, Edition - 2006.
6. Gandhi, K., Tamil Customs and Beliefs, International Institute of Tamil Studies, Taramani, Chennai, Edition - 1980.
7. Shanmugam Pillai, Mu., Worship and Rituals of Sangam Tamils, International Institute of Tamil Studies, Chennai, Edition - 1996.

# அகநானூற்றில் நீத்தாரின் ஆன்மா பற்றியக் கோட்பாடு

***முனைவர் கு. அந்தோணிராஜா***
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தூயவளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

***ஆய்வுச்சுருக்கம்***

*ஆன்மா என்பது தெய்வீகத்துடன் தொடர்புடையதாக மற்றும் உடலின் மரணத்திற்குப் பிறகும் உயிர்வாழும் ஒரு நபரின் பகுதியைக் குறிக்கிறது. மதம் மற்றும் தத்துவத்தின் அடிப்படையில், ஆன்மா ஒரு மனிதனின் அருவமான அம்சமாகும். ஆன்மா என்பது உயிர்களுடைய உள்ளார்ந்த பகுதியாகக் கருதப்படுகிறது. அவ்வாறே பண்டைய தமிழ் மக்களும் உயிர்நீத்தோரின் ஈமச்சடங்கு முறைகளிலும் நீத்தோரின் ஆன்மா பற்றி பல்வேறு கோட்பாடுகளையும் கொண்டிருந்தனர். தமிழின் செவ்வியல் இலக்கியங்களில் பண்டைத் தமிழருடைய ஈமச்சடங்குகள் பற்றியும் உயிர்நீத்தோரின் ஆன்மா பற்றிய கோட்பாடுகள் பண்டைத் தமிழர்களால் பண்டைத் தமிழ்புலவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. எட்டுத்தொகைநூல்களில் ஒன்றான அகநானூற்றின் வழியாக பண்டைய தமிழருடைய நீத்தோரின் ஆன்மா பற்றிய கோட்பாட்டை ஆராய்ந்து வெளிக்கொணரும் வகையில் அமைகிறது.*

***கலைச்சொற்கள்:*** *ஈமச்சின்னம், தாழி, பெருங்கற்படை, கல்திட்டை, கற்குவேல், பீலி, கற்கிடை,பேழை, ஆன்மா, கோட்பாடு.*

## முன்னுரை

அகநானூற்றின் பல பாடல்கள், உயிர் நீத்தவரின் பெயரும் புகழும் எழுதப்பட்டு மயில் இறகு சூட்டிய கேடயங்கள் தொங்கும் ஊன்றிய வேல்களால் சூழப்பட்டு நடுகல்கள் இருக்கும் என்றும் நல்ல நீரால் நடுகல்லைக் கழுவி, சிறிய வீடுகளில்கள் தயாரித்து நடுகல்லிற்கு தினமும் படைப்பர் என்றும் எடுத்துரைக்கின்றது. மேலும் நறுமண எண்ணெய் கொண்டு விளக்கு ஏற்றுவார்கள். அதன் கருமையான பெரும் புகையானது நறுமணத்தோடு தெருக்கள் எங்கும் கமழும் என்றும் இறந்தவரின் ஆன்மா இவ்வுலகிலேயே உலாவி கொண்டிருக்கும் உடலை நீத்து ஆன்மவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் என்பதான பண்டைத் தமிழருடைய கோட்பாட்டைக் குறித்தும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

## பண்டைத் தமிழரின் வாழ்வியலில் நீத்தார் வழிபாடு

நீத்தார் வழிபாடு என்பது இறந்தவர்களை வழிபடும் ஒரு தொன்மையானப் பண்பாட்டு முறையாகும். பண்டைத் தமிழ் மக்களிடம் வேரூன்றி இருந்த வழிபாடுகளில் இந்த மூத்தோர் வழிபாடு மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். அனைத்து மதங்களிலும், தத்துவங்களிலும், புராணங்களிலும், குறிப்பிடப்பட்டுள்ளது. பகுத்தறிவு, உணர்வு, குணம், நினைவாற்றல், உணர்தல், சிந்தனை, போன்ற அனைத்தும் ஆன்மாவின் உணர்ச்சி மற்றும் மனத்திறன்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், போன்ற பலதத்துவ வாதிகள் பல்வேறு கோட்பாடுகளின் மூலம் ஆன்மாவின் பொருளை விளக்குவதற்கு முயன்றுள்ளனர். ஒவ்வொரு மதமும் ஆன்மா பற்றிய வெவ்வேறு பார்வைகளைக் கொண்டுள்ளது. இது உடல் மற்றும்

ஆன்மீகம் போன்ற பல்வேறு கூறுகளால் ஆனது என்றும் கடவுளின் அடையாளமாகவும் கருதுகின்றனர்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'**
***(திருக்குறள் :50)***

உலகத்தில் வாழ வேண்டிய அறநெறிகளின் வழி நின்று, வாழ்பவன் வானுலகத்தில் உள்ள தெய்வமுறையில் வைத்து வணங்கப்படுவான் என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இதன் அடிப்படையில் வழிவந்ததே நீத்தார் வழிபாட்டு முறையாகும். பெருங்கற்காலக் காலத்தில் இருந்தே, இந்த மரபு தமிழர்களிடையே காணப்படுகிறது. இதற்கான சான்றுகளை தொல்லியல் ஆய்வுகள் வழங்குகின்றன. கொந்தகை, ஆதிச்சநல்லூர் போன்ற புதைமேடுகளை ஆய்வுகள் செய்ததில் நீத்தார் வழிபாட்டு முறை இருந்ததற்கான ஆதாரங்கள், தாழிகள் வடிவிலும் ஈமச்சின்னங்களின் மூலமாகவும் கிடைத்துள்ளன.

போற்றுதலுக்குரிய செயல்கள் செய்து, வீரமரணம் அடைந்தோரைத் தெய்வமாக வழிபட்டது, நமது பண்டைய தமிழரினம். தொல்காப்பியர் காலம் தொட்டு இருந்து வந்த, இந்த மூத்தோர் வழிபாடானது, நமக்கு முன்னர் வாழ்ந்து, எமது குடிகளை காத்து இறந்த வீரமறவர்களை, மூத்தோராகக் கொண்டு தலைமுறை, தலைமுறையாகத் தொடர்ந்த மரபு தான் நடுகல் வழிபாடு. இது பிற்காலத்தில் கிராமிய தெய்வமரபாகவும், குலதெய்வ வழிபாட்டின் முறையாகவும் மாற்றம் பெற்றது.

அகநானூற்றின் பல பாடல்கள், உயிர் நீத்தவரின் பெயரும் புகழும் எழுதப்பட்டு மயில் இறகு சூட்டிய கேடயங்கள் தொங்கும் ஊன்றிய வேல்களால் சூழப்பட்டு நடுகல்கள் இருக்கும் என்றும் நல்ல நீரால் நடுகல்லைக் கழுவி, சிறிய வீடுகளில்கள் தயாரித்து நடுகல்லிற்கு தினமும் படைப்பர் என்றும் எடுத்துரைக்கின்றது. மேலும் நறுமண எண்ணெய் கொண்டு விளக்கு ஏற்றுவார்கள். அதன் கருமையான பெரும் புகையானது நறுமணத்தோடு தெருக்கள் எங்கும் கமழும் என்றும் இறந்தவரின் ஆன்மா இவ்வுலகிலேயே உலாவி கொண்டிருக்கும் உடலை நீத்து ஆன்மவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் என்பதான பண்டைத் தமிழருடைய கோட்பாட்டை எடுத்து ரைக்கின்றது.

## ஈமச்சடங்கும் ஆன்மா பற்றிய நம்பிக்கையும்

சங்ககாலத்திற்கு முற்பட்ட பெருங் கற்காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் தங்களின் குடியிருப்புகளுக்குச் சற்று தூரத்தில் தனியாக ஓர் இடத்தை ஏற்படுத்தி அங்கு இறந்தவர்களை அடக்கம் செய்தனர் இறந்தவர்களை அல்லது எலும்புகளைப் புதைக்கின்ற இடத்தில் மாபெரும் கருகற்களைக் கொண்டு ஈமச்சின்னங்களை அமைத்தார்கள். புதிய கற்காலத்தின் இறுதியிலும் பெருங்கற்காலம் முழுவதிலும் இறந்தவர்களைப் புதைக்கும் பழக்கம் ஊர் கூடி செய்கின்ற சடங்கு முறையாகவே உலகம் முழுவதிலும் இருந்துள்ளது.

இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் பெருங்கற்களைக் கொண்டு சின்னங்களை அமைத்ததால் இக்காலம் 'பெருங்கற்காலம்' என்று ஆய்வாளர்களால் குறிக்கப்படுகிறது.

இக்கால மக்கள் இறந்தவர்களின் ஆன்மா பற்றிய பல நம்பிக்கைகளையும் அதன் வழியான பல கோட்பாடுகளையும் கொண்டு இருந்தனர் ஒருவர் இறந்த பிறகு உடல் அழியுமே தவிர ஆன்மா அழிவதில்லை என்றும் இறந்தவரின் ஆன்மா அருவுருவமாக வாழ்ந்து வரும் என்ற கோட்பாட்டைக் கொண்டவர்களாக விளங்கினர். எனவே இறந்தவர்களை புதைக்கின்ற இடத்தை பெருங்கற்களை கொண்டு அறை போன்ற அமைப்பை உருவாக்கி அதில் இறந்தவர்களை கிடத்தியும் அவர்கள் பயன்படுத்திய

பொருட்கள் அவர்களுக்கு தேவையான பல வகையான உணவுப் பொருட்கள் மட்பாண்டங்கள் என அனைத்தையும் அவர்களோடு வைத்து அடக்கம் செய்து விடுவர். அடக்கம் செய்யப்பட்டவரின் ஆன்மா வெளியில் சென்று உலாவும் என்ற கோட்பாட்டை கொண்டவர்களாக விளங்கியதால் கல்லறையின் கிழக்குப் பக்கம் உள்ள பலகைக் கல்லில் வட்டமாக ஒரு துளையினை அமைத்தனர்.

> ***"இறந்த பின்னர் ஆன்மா (ஆவி) வடிவில் மனிதர்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள்" என்ற நம்பிக்கையினால் அந்த ஆவிகள் கல்லறையினுள் வந்து செல்வதற்காக வட்ட வடிவில் துளையிடப்பட்டது"[2]***
>
> ***(இராசவேலுசு, தொல்லியல்சுடர்கள், பக்-38)***

***ஈமச்சின்னங்களின் வகைகள்***

பண்டைத்தமிழர்கள் ஈமசின்னங்களை பல்வேறு வகையில் அமைத்தனர். கற்பதுக்கை, கல்திட்டை, கற்குவை. கல்கிடை, கல்வரிசை. குடைக்கல், தொப்பிக்கல், குடைடவரைத் தாழ்வரைகள், குத்துக்கல், நெடுங்கல், தாழி என்று பலவகை அமைப்புகளுடன் காணப்படுகின்றன.

தரையினில் குழியினைத் தோண்டி அதனுள் இறந்தவர் உடலைப் புதைத்து விடுவர். பின்னர் அதன் மீது பலகைக் கற்களையோ அல்லது உருண்டைப் பெருங்கற்களையோ கொண்டு நினைவுச் சின்னங்களை அமைப்பர். இவைகள் கற்ப துக்கை, கல்திட்டை என்று இருவகைப்படும்.

***நீத்தாரின் ஆன்மா பற்றிய கோட்பாடுகள்***

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூறு அகத்துறை சார்ந்த, நானூறு பாடல்களைக் கொண்ட நூலாகும். இந்நூல் குறிஞ்சியும், முல்லையும், மருதமும், நெய்தலும். பாலையும் என அன்பின் ஐந்திணைகளுக் குரியதான ஒழுக்கத்தினை எடுத்துக் கூறுகின்றது. பல்வேறு காலங்களைச் சார்ந்த புலவர்களால் பாடப்பட்டது. பாலை நிலம் என்பது முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் இளவேனில் முதுவேனில் காலங்களில் செழுமை இன்றி வறட்சியுடன் காணப்படும். இக்காலங்களில் இவ்விருநிலங்களும் பாலை நிலம் எனப்படும். அகநானூற்றில் இடம்பெற்றுள்ள பாலை நிலப்பாடல்களில் பொருள் தேடுவதற்காகத் தலைவன் தலைவியினைப் பிரிந்து நெடுந்தொலைவு பயணம் மேற்கொள்ளும் போது மிகவும் வறட்சியான காட்டினைக் கடப்பதற்கு அரிதான பாலைநில வழிகளைக் கடந்து தான் செல்லவேண்டும். இவ்வழிகளின் தன்மையினை அழல் அவிர் அருஞ்சுரம் ஈரமில் வெஞ்சுரம், கோட்சுரம் என்றும் சுரம் சார்ந்த வழிகளில் இருக்கின்ற மலைகளின் நிலையினை புலவர்கள் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

இத்தகைய வெஞ்சுரத்தினைத் தலைவன் கடக்கும் போது அவன் காண்பதும் அவனை அச்சுறுத்துவதுமாக பல செய்திகளைப் புலவர்கள் பதிவிட்டுள்ளனர். அவைகளில் ஒன்று தான் பெருங்கற்படைச் சின்னங்கள் பெருற் கற்காலத்தைச் சார்ந்த ஈமச்சின்ன வகைகளுள் ஒன்றான கற்பதுக்கை வகை ஈமச்சின்னங்களைப் பற்றிய செய்திகள் பாலைத்திணைப் பாடல்களில் அதிகமாக இடம் பெற்றுள்ளன.

> ***"வெண்நுனை அம்பின்விசை இடவீழ்ந்தோர்***
> ***எண்ணுவரம்பு அறியா உவலிடுப துக்கை"[3]***
>
> ***(அகநானூறு-109, 7:8)***

இப்பாடல் அடிகள் போர்க்களத்தில் கூரிய அம்புபட்டு இறந்த வீரர்களுக்காக அமைக்கப்பட்ட பதுக்கைகள் பற்றி குறிப்பிடுகின்றது.

> ***இரலை சேக்கும்பரலுயர் பதுக்கை***
> ***கடுங்கண்மழவர் களவு உழவு எழுந்த***
> ***நெடுங்கால் ஆசினி ஒடுங்காட்டு4***
>
> ***(அகநானூறு-91, 10:12)***

இப்பாடல் அடிகள் வறண்டு போன பரந்தகாட்டுப் பகுதியில் ஆறலைக் கள்வர்கள் உலாவும் இடத்தில், பரல்கற்கள் நிறைந்த உயர்ந்த கற்பதுக்கைகள் இருந்தன என்று குறிப்பிடுகின்றது.

**"............குறும்படை மழவர்**
***முனை ஆத்தந்து முரம்பின் வீழ்த்த***
***வில்ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்***
***வல் ஆண்பதுக்கைக் கடவுட் பேண்மார்***
***நடுகல் பீலி சூட்டித் துடிப்படுத்துத்***
***தோப்பிக்கள்ளொடுதுரூ உப்பலி கொடுக்கும்***
***போக்கு அருங்க வலைய புலவுநூறு***
***அருஞ் சுரம்"[5]***

***(அகநானூறு-35, 4:10)***

இப்பாடல் அடிகள் கரந்தைப் போரில் வெற்றிகண்ட வீரர்கள், இறந்தவீரர்களுக்காக "பதுக்கைகள் அமைத்து அதன் நடுவே நடுகல் நட்டு செய்யப்படும் வழிபாட்டு முறைகளையும், இத்தகைய பதுக்கைகள் உள்ள புலால் நாற்றம் வீசும் இடங்கள் வழி செல்வோருக்கு, அச்சம் தரக் கூடியதாக இருந்தன என்றும் குறிப்பிடுகின்றது.

***"நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்***
***பெயரும் பீடும் எழுதியதர் தொறும்***
***பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்***
***வேல்வஊன்றுபலகைவேற்றுமுனைகடுக்கும்***
***உவல் இடிபதுக்கை ஆள் உகுபறந்தலை***
***இலங்குபரல் இமைக்கும்"[6]***

***(அகநானூறு-67, 8:17)***

இப்பாடல் அடிகள் ஆநிரைகளை மீட்கும் கரந்தைப் போரில் இறந்த வீரர்களுக்குப் பதுக்கைகளுடன் அமைக்கப்பட்ட நடுகல் பற்றியும் வழிகளிலெல்லாம் உள்ள பதுக்கைகளின் மேல்குவிக்கப்பட்டுள்ள பரல்கற்கள் ஒளிவீசிக் கொண்டிருக்கும் என்றும் குறிப்பிடுகின்றது.

***"விழுத் தொடை மறவர்வில் இடவீழ்ந்தோர்***
***எழுத்துடை நடுகல் இன்நிழல் வதியும்***
***அருஞ்சுரக்க வரை நீந்தி"[7]***

***(அகநானூறு-53, 10:12)***

இப்பாடல் அடிகள், கடப்பதற்கு அரிதான வெஞ்சுரங்களில் மறவர்களின் கூரிய அம்பினால். இறந்தவீரர்களுக்கு எழுப்பப்பட்டநடுகற்களில்வீரர்களின்பெயரும்புகழும்எழுதப்பட்டிருக்கும்என்றுகுறிப்பிடுகின்றது.

***"செருவேட்டுச்சிலைக்கும்செங்கண் ஆடவர்***
***வில்லிடவீழ்ந்தோர்பதுக்கை"[8]***

***(அகநானூறு-157, 7:8)***

இப்பாடல் அடிகள் தலைவன் செல்லும் அருஞ்சுரத்தில் செங்கண் கொண்ட வீரர்களின் அம்புபட்டதால் இறந்தவர்களுக்கு அமைக்கப்பட்ட பதுக்கைகள் நிறைந்திருக்கும் என்று குறிப்பிடுகின்றது.

***"வடிநவில்அம்பின்வெல்ஆடவர்***
***ஆளழித்துஉயர்த்தஅஞ்சுவருபதுக்கை"[9]***

***(அகநானூறு-215, 10:11)***

என்றும்

***"மல்லல்மொசிவிரல்ஒற்றிமணிகொண்டு***
***வல்வாய்ப் பேடைக்குச் சொரியும"[10]***

***(அகநானூறு-215, 14:15)***

என்றும் இறங்குடிக்குன்ற நாடன் என்னும் புலவர் பாடியுள்ளார். இப்பாடல் அடிகளில் மறவர்கள் வழிசெல்வோரை அம்பின்நுனியால் கொன்று, பின்னர் பிணங்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்துக்குவித்து அதன் மேல் பரல்கற்களை மிகுதியாகக்கு வித்துபதுக்கை அமைத்து விடுவர். இந்த பதுக்கை மீதுவந்து அமரும் கழுகு இனங்களில் வலிமையான எருவை என்னும் புலால் உண்ணும் பறவை பதுக்கைகளில் உள்ள பரல்கற்களைத் தோண்டி அதனுள் உள்ள பிணங்களின் கண்களை தன்வலிய சிவந்த அலகால் பிடுங்கி எடுத்துக் கொண்டிருக்கும் காட்சியினைத் குறிப்பிடுகின்றார்.

***"கொடுவிற் கானவர்கணை***
***இடத்தொலை தோர்***
***படுகளத்த உயர்ந்த மயிர்த்தலைப்***
***பதுக்கை***

**கள்ளியம் றந்தலைக்களர் தொறும் இழீது**[11]

**(அகநானூறு–231, 5:7)**

மதுரை ஈழத்துப் பூதன்றேவனார் பாடிய இப்பாடலில் கொடியவில் உடையகானவர்களால் கொல்லப் பட்டோர் அடக்கம் செய்யப்பட்ட பதுக்கைகள் பாழிடங்களான அக்களர் நிலவழிகள் தோறும் நிறைந்திருக்கும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

**"சிலை ஏறட்ட கணை வீழ்வம் பலர்**
**உயர் பதுக்கு இவர்ந்தததர் கொடி அதிரல்**
**நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டும்'**[12]

**(அகநானூறு–289, 1:3)**

இளங்கீரனார் பாடிய இப்பாடலில் ஆறலைக் கள்வர்களால் கொல்லப் பட்டவர்களின் உடல்களின் மேல் எழுப்பிய, கற்குவியல்களால் ஆன கற்ப துக்கைகளில், உள்ள நெடுநிலை நடுகற்களின் மேல் அதிரல் பூங்கொடியானது படர்ந்திருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அகநூனூற்றுத் தலைவன் பொருளீட்டுவதற்காகதலைவியைப்பிரிந்து மலைகள் சூழ்ந்த வறண்ட நிலங்களை உடைய அச்சம் தரும் காட்டு வழியினைக் கடக்கும் போது அவ்வழிகள் முழுவதும் ஆறலைக்கள்வர்களால் இறந்தவர்களின் உடல்களை குவித்து அமைக்கப்பட்ட கற்பதுக்கைகளும் போரினால் வீரமரணம் அடைந்த வீரர்களுக்காக அமைக்கப்பட்ட நெடுங்கல்லுடன் கூடிய பதுக்கைகளும் வழிநெடுகிலும் நிறைந்துள்ளன.

இக்கற்பதுக்கைகள் பண்டைத் தமிழரின் பண்பாட்டு எச்சங்களாகக் கிடைக்கின்றன. இவ்வாறு பண்டையகால தமிழர்களின் நீத்தார் வழிபாட்டில் ஆன்மா பற்றிய கோட்பாடுகளைப் பற்றி அறிந்த கொள்வதற்கு அகநூனூறு பெருந்துணை செய்கின்றது.

**முடிவுரை**

மூத்தோர் வழிபாடு என்பது தமிழர்களின் பண்பாட்டில் மேன்மை மிக்க வழிபாட்டு முறையாகும். பெருந்தெய்வங்கள் மக்களின் தெய்வ வழிபாட்டில் இடம் பெறாத காலங்களில் மூத்தோரை தெய்வமாக வணங்கும் வழக்கமே மரபாக இருந்து வந்தது. அத்தகை மூத்தோர் வழிபாட்டின் மிக முக்கிய சடங்காகத் திகழ்வது இறந்தவரை அடக்கம் செய்யும் முறையாகும். இறந்தவர்களைத் தாழியில் வைத்துப் புதைக்கும் முறை பெருங்கற்காலத்திற்கு முன்பிருந்தே தமிழர் பண்பாட்டில் இருந்து வரும் வழக்கமாகும்.

புதைக்கும் போது இறந்தவர் பயன் படுத்திய பொருட்களையும் தாழிக்குள் உடலோடு சேர்த்து வைத்துப் புதைப்பர். பழங்காலம் முதல் தமிழர்களின் அன்றாட வாழ்வில் மட்பாண்டங்கள் முக்கியமான ஒன்றாகத் திகழ்ந்து வந்துள்ளன. அது போலவே இறந்தவர்களின் ஈமச்சடங்கிலும் பலவகையான மட்பாண்டங்கள் பயன் படுத்தப்பட்டன. அவைகளில் ஒன்று தான் முதுமக்கள் தாழி. இறந்தவர்களைத் தாழியினுள் வைத்துப் புதைக்கின்ற மரபானது தாய்த் தெய்வ வழி பாட்டினுடைய நம்பிக்கையினால் ஏற்பட்டது என்பதை அகழாய்வுகள் நிரூபிக்கின்றன. எனவே தான் தாழியின் வடிவத்தினை தாயின் கருப்பை போன்று வடிவமைத்தனர். இதன் மூலமாக உடலின் இறப்பிற்குப் பின்பும் ஆன்மாவின் வாழ்வு உண்டு என்ற கோட்பாட்டில் தமிழர்கள் நிலைப்பாடு கொண்டிருந்தனர் என்பது வெளிப் படுகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. சுப்பிரமணியன் ச.வே., சங்க இலக்கியம் – எட்டுத்தொகை, மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு–2006.

2. இராசமாணிக்கனார். மா, தமிழர் நாகரிகமும் பண்பாடும் பாரிநிலையம், சென்னை, முதற்பதிப்பு-1975
3. இராசவேலு, சு., தொல்லியல் சுடர்கள், சேகர் பதிப்பகம், சென்னை, பதிப்பு - 1998
4. இராசன்கா., தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பதிப்பு-2004
5. செல்லம் வே.தி., தமிழக வரலாறும் பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பதிப்பு-2006
6. காந்தி. க, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, பதிப்பு-1980
7. சண்முகம்பிள்ளை. மு, சங்கத்தமிழரின் வழிபாடும் சடங்குகளும், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பதிப்பு-1996